மகா சம்ப்ரம தேவ

[illegible] சுவாமிகள்.

D-,2MJP2,m
M28
175569

332

உ

சிவமயம்.

மகா சம்ப்ரம சரவல்

# தேன அமராவதி சரிதம்

இராமநாதபுரம் ஜில்லா
திருவுத்திரகோசமங்கை தேவஸ்தானம்
வித்வ க்ஷேத்ர தேரிருவேலி

S. M.
## தங்கம்பிள்ளை

அவர்கள் இயற்றியது.

மதுரை புதுமண்டபம் புக்ஷாப்
இ. ராம. குருசாமிக்கோனர்
அவர்களாற்றமது
மதுரை வடக்குமாசிவீதி
ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1928 [அணா 4
(ரிஜிஸ்டர் காபிரைட்)

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
No. 12 OCT

0-,2MJP2,M
M28
125569

உ

சிவமயம்.

மகா சம்ப்ரம சரஸ

# தன அமராவதி சரித்திரம்

இராமநாதபுரம் ஜில்லா

திருவுத்திரகோசமங்கை தேவஸ்தானம்

வித்வ க்ஷேத்ர தேரிருவேலி

**S. M.**

**தங்கம்பிள்ளை அவர்கள்**

இயற்றியது.

OFFICE OF THE REGISTRAR MADRAS
12 OCT 1928

மதுரை புதுமண்டபம் புக்ஷாப்

இ. ராம. குருசாமிக்கோனார்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

தன் விலை] 1928 [அணா 4

(ரிஜிஸ்டர் காபிரைட்)

175569
600 008.

உ

சிவமயம்.

மகா சம்ப்ரம சரஸ

# தன அமராவதி சரித்திரம்

## விநாயகர் துதி.

### வெண்பா.

மா தன வமரா வதியின் சரிதைதனை
யோது வதற்கு வுமைசேயன்—போதகலி
மாமுகவ னேசரணம் வையகத்தோர் கொண்டாட
தாமசமி லாதுவரந் தா.

---

### ஐங்கரகணநாதா என்ற வர்ண மெட்டு.

இராகம்-நாட்டை தாளம்-ஆதி.

கண்ணிகள்

அந்தரகண நாதா ஜெயஜெய
துணையடியவர் வரதாஜெயஜெய (ச)

மந்திரபோதா மாமறைசுகிர்தா
வல்லபையின்ச மேதா ஜெயஜெய (ச)

அந்தரிபாலகனே ஜெயஜெய
அருள் தங்கந் தமிழோனே ஜெயஜெய (ச)

சந்த்ரமுகவதிதன அமராவதி
சரிதைநவில ருள்ததி ஜெயஜெய (ச)

---

## 1-வது சீன்.

உச்சினிமாகாளிபுரம் அரண்மனை
அரசன் விக்கிரமாதித்தன், மந்திரி பட்டி
சகலர்கள் சூழவிருத்தல்.

## விமலகமல மோகனஜ்ஞானி என்ற வர்ணமெட்டு

இராகம்-பாரீஸ்மோகனம் தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

கடல்சூழுலகோர் புகழுந்தகைநற் காமன்நேமன்
கருணைவாத பைரவிபதந் துதிசேர்பூமன்
சுடர்மணிமுடி சிரசுளான் சுகிர்தபஹதூர் வடிவுளான்
துஷ்டநிக்ரக சிஷ்டபாலன சுந்தரயிந்திரன் மந்திரதந்திரன் ()

விக்கிர—ஹே ப்ரதான்பட்டி நாம் நீதிதவறாது உச்சினிமாகாளி நகரத்தை எவர்களும் புகழ்ந்தேற்ற யாதொரு சிவபெருமானது கிருபாகடாக்ஷத்தாலும் நம் குலதெய்வமாகிய பைரவி காளியினுடைய வரப்பிரசாதத்தாலும் நினது புத்தி தீக்ஷண்யத்தாலும் இவ்வாழிசூழ் அவனி முழுமையும் அரசாக்ஷி புரிந்து வருகின்றேனன்றோ?

பட்டி—ஆம்.

விக்கிர—நமது நீதியைப்பற்றி குடிகள் எவ்வாறு புகழ்ந்துரைக்கின்றார்கள்.

பட்டி—வேந்தே நந்தியாபுரம் பிர்மகுல நம் தந்தையாகிய சந்த்ரவர்ணன் சகல நூற்களையும் கற்றும் இன்னும் சந்தேகநிவர்த்தி செய்யும்பொருட்டு யுக்த ஆசானைத் தேடும்பொருட்டு தேசதேயங்கடோறுஞ்சென்று குருவகப்படாது வருமார்க்கமோர் ஆரண்யத்தில் தவசுபண்ணிக் கொண்டிருக்கும் பிரமராக்ஷதரைக் கண்ணுற்று அன்னவர் அனுக்ரகத்தால் சகலவேதாகமங்களை ஆராய்ந்து வருதியடைதலும் கன்னியாபுரிவந்தடைந்து நமது சிற்றன்னையாகிய கணிகைகுல அலங்காரவல்லியால் நமது பாட்டாவாகிய சுத்தவர்மராஜபுதல்வி தங்களுக்கு அன்னையாகிய சித்ரரேகை புரோஹிதருடைய குமாரத்தி கலியாணி சோமசேகரவணிகர் புதல்வி என்னை ஈன்றதாய் கோமளாங்கி அலங்காரவல்லி இந்நான்கு பேரையும் நம் பிதாவானவர் வதுவைசெய்து வல்லவரிஷி, பத்திரகிரி நாமிருவர் ஆக நான்கு பேரையும் புத்திரர்களாயீன்று வாழும் நாட்களில் மனுதர்மசாஸ்திரப்படி நமது சகோதரர் பத்ரகிரியார்க்கு அர

சைமுடிசூட்டி தந்தை பதவியுற வல்லவரிஷி தவத்தைநாடிச் சென்றூர் பத்ரகிரியார் முந்நூற்றறுபது பெண்ணை வதுவை செய்து பின்னர் ஓர் ஆன்ருேரால் தந்தகனியை உட்கொண்டு என்றும் பதினாறு வயதடைந்து துறவியாகினர்.

நமது தந்தையரசு புரிந்த நகரம் சிறிதென நினைத்து நாமின்னகரம் பெருங்காடாகவும் அங்கிலத்திற் கிறைவியாகிய பைரவி காளி ஆலயந்தோற்றக்கண்டு ஆங்குள்ள மர்மங்களின்படி செய்து பைரவியினுடைய அனுக்ரகத்தால் 2000 வயதடைந்து இவ்வுலகத்தோர்கள் புகழ்ந்துரைக்கும்படி அரசுபுரிந்து வருகின்றதைப்பற்றி குடிகள் யாவரும் புகழ்கின்றூர்கள் அரசே.

விக்கிர—மிகவும் சந்தோஷம் நமது இராஜ்ஜியத்தின் விஷேடங்களைப்பற்றியும் குடி முதலியவர்கள் நன்னடக்கை முதலிய விஷயங்களைப்பற்றியும் கேட்க மிகவும் அவாவுற்றேன் உம் கருத்தியாது புகலுமின்.

பட்டி—பிரித்தலும் பேணிக் கொள்ளலும் பிரிந்தார்ப் பொருத்தலும் வல்லதமைச்சு என்ற வாக்கியத்திற்கிணங்க தங்களது ஆக்ஞைக்கிப் பதிலுரைக்கத் தயாராயிருக்கின்றேன்.

## தேயவிசாரணை.

### வளமேவியபடைசூழ் என்றவர்ணமெட்டு

#### சந்தவிருத்த கண்ணிகள்

வி—பதியோர்சுக முறவேமழை பமுதின்றிபெய் கிறதா

ப—பரிவாகவே மழைபெய்துமே பதிவாழ்கிறூர் சுகிர்தா

வி—விதியந்தணர் மறையோதிடும் விபரமதை நவில்வீர்

ப—விதியின்படி மறையோதுறூர் விமலாததி யறிவீர்

வி—சிவபூஜைக ளாறுகாலமூர் தினமும்நடை பெறுதா

ப—சிறிதுந்தவ றிலேயேவெகு ஜெயமேநல வரதா

வி—சுபமூவர்கள் தொழிலோதுவீர் துணைசோதர மதியே

ப—தொழில்நீதியே பிசகாமலே துதியேபுகுந் ததியே

வி—நிலையேதரு நெறிமன்னவர் செயலோதுவீர் மதியே

ப—தினமேகுதா கலமேதங்கள் ஜெயமேகல பதியே

வி—தருமாலயக் தனிற்சாதமே சரியாய்கடக் கிறதா

ப—தனியேழைக ளாடியார்வரை சந்துஷ்டியே வாதா

பட்டி—வேந்தே நமது இராஜ்ஜியத்திலுற்ற சர்வ ஜனங்களும் மகிழ்ந்து வாழும்படிக்கேதுவாகிய துணைக்காரணமாயுள்ள மழை தவறாது பெய்தலும் அந்தணர்கள் சதாவும் வேதபாராயணங்களை ஓதுதலும் தேவாலயங்களில் திருவிழா பூஜை அறுகாலந்தவறாது நடந்துவருவதும் க்ஷத்ரிய, வைசிய, சூத்ரர் முதல் மற்ற ஜாதியர்களும் அவ்வவ்வகுப்படி நடந்து வருவதும் தேகி முதலியவர்களுக் கேற்படுத்திய போஜனசாலையில் இல்லையெண்ணாது அமுதளித்து வருவது முதலிய சம்ப்ரமங்களை எவ்வாறெடுத்துரைக்கப் போகின்றேன் யாதொரு குறைவுஞ் சொல்வதற்கிடமில்லை.

விக்கிர—மந்திரி உம்முடைய கருத்துகளையும் வாக்ய சாதுர்யங்களையும் பார்க்கவும் கேட்கவும் என்ன ப்ரமாணந்தமாயிருக்கின்றது. ப்ரதான் நம் நாட்டில் அரசாக்ஷி புரிந்தது இன்றோடே ஆறு திங்களும் சரியாகினவோ.

பட்டி—ஆம் அரசே நாம் கானகசஞ்சாரஞ்செய்து வருவதற்கிதுவே நன்னாள்.

விக்கிர—நம் குலதெய்வமாகிய பைரவிகாளியின் வருதியடைந்து செல்வோம்.

---

## 2-வது சீன்.

### பைரவி கோவில்.

திருவாவினங்குடி என்ற வர்ணமெட்டு

இராகம்-சகாணு தாளம்-ஆதி

கண்ணிகள்

குலமீஸ்பரியே நின்பதமதைப் பணிந்தேன்
தலமுள்ளோரேற்றச் சந்ததஞ் சிறந்தேன்

காட்டில்வாழ்மாதம் நடைபெற்ற தாலே
காட்டிலாற்மாதம் கழிக்கயிக் காலே (கு)

விக்கிர—குலராஜ ராவேஸ்வரி நாங்களிருவரும் வனசஞ்சாரம் செய்து திங்களாறையுங் கழித்திங்குற வரம்பாலிப்பாயாக.

[அம்பாள் ப்ரசன்னமாகுதல் ஸ்தோத்தரித்தல்]

பைர—ஹே பாலர்காள் மங்களமுண்டாகுக. சென்றுவரக்கடவீர்கள்.

(விஷயம்) அரசனும் மந்திரியும் தனது வாகனமாகிய வேதாளத்தின்மீதாரோகணித்து வனுதிசயங்களைக் கண்ணுற்று கலிங்கபுரத்திற்கடுத்த பூஞ்சோலையும் தடாகமுமிருப்பக்கண்டு அதில் வந்து தங்கினர்.

விக்கிர—மந்திரி இவ்வழகிய சோலைசூழ்ந்த தடாகத்தைக் கண்ணுற்றீரா. என்ன் விசித்திரம் இவண் சுற்றிப்பார்ப்போம் வருவீர்.

---

## 3-வது சீன்.

### சோலை தடாகம்.

காக்ஷிகண்காக்ஷியே என்ற வர்ணமெட்டு

இராசம்-தேசிகதோடி. தாளம்-ரூபகம்.

பல்லவி

இவ்வனத்த டாகமே என்சொல்வேன் மனதுவுற்சாகமே (இ)

அனுபல்லவி

எங்கினுமே கண்டதில்லை இதுகல லதிசயவ்னேதமே (இ)

சரணம்

செவ்வந்தி ரோஜாமுதல், திகழுதே வாசமே
தேனதை யுண்டுவண்டு பாடுதேவுல் லாசமே
திவ்வியகா சத்தைகொய்யா செழிந்தப லாவுமே
தேங்கனிமாங் கனிமுதல் தித்திக்குமா னந்தமே

சித்திரமாமுயர்மணி மேடை நன்றாய்
சிறந்திடுஞ்செங்கழநீ ரோடை மிகவி
சித்திரமாய்வீசுந்தென்றல் வாடை வெகு
சிறப்பிதுவன்னமிளம் பேடை

சிந்தையில் மிகப்பூர்த்தி
சிறந்திடுங் கண்ணேர்த்தி
எந்தவேளை யுஞ்சீர்த்தி
இதுவும் நல்லகீர்த்தி (இ)

விக்கிர—ப்ரதான் இல்லறமல்லது நல்லறமல்லவென்றுரைத்த வாக்கியமானது இல்வாழ்வைப்பற்றியே பெரும்பாலுங் கூறியிருக்கச்சிலர் துறவறத்தை நாடிச்செல்லுங் காரணத்தை யோசிக்கில் இவ்வழகிய சோலைசூழ்ந்த பொய்கையைக் கண்ணுற்றுப் பரவசமாகிறதற்கும் நானாவித மயில், குயில், கிளி முதலிய பக்ஷிகளின் தொனிகளைக்கேட் டானந்திப்பதற்கும் முக்கனிவகைகளை யருந்துவதற்கும் சுகானந்தமடைவதற்கான தென்றல் வர்டை முதலியவைகளுக்கே துறவுவேடங் கொள்கின்றார்களென வெண்ணமுற்றேன். ஆனதால் இம்மேடையின்கண் சயனிப்போம்.

பட்டி—நல்லது.

---

# 4-வது சீன்.

## கலிங்கபுரம் அத்தப்புரம்

வைசிய தனஅமராவதி

சண்பகம், பரிமளம், கோகிலம், குணபூஷணம் தோழிகள்

---

உமை வணக்கம்

மாதுபாகமானவா என்ற வர்ணமெட்டு.

ரோட் கண்ணிகள்.

சர்வலோக தயாபரி சாக்ஷாத் மனோகரி
சந்ததம் பணிந்தனன் தயாளை நீயாதரி
சம்போ சங்கரி யோங்காரி ஜகம்பிரந்தரி

தனைமணியே மகபதியே
சுகநிதியே பகவதியே
தடாதகைப்பிராட்டியே தாய்லட்சுமிமாட்டியே
தங்கஞ்சொற்ப்ரகாசியே (ச)

தன—ஹே சகிகாள் எனது நாயகரானவர் என்னை ஐந்து வயதில் மணமுடித்து திரைகடலோடித் திரவியந் தேடென்ற வாக்கியத்தின்படி பொருள் சம்பாதிக்கச்சென்றவர் வருடம் ஏழாகியும் வராத காரணமெனக்கு யாதொன்றுந் தெரியவில்லை அல்லது இன்னவிடத்திலிருக்கிறேனென்பதாவது யாதொரு நிருபமாவது எழுதியனுப்பவில்லை அதனாலெனது நெஞ்சம் பகீர் பகீரெனத்துடிக்கின்றது என்செய்வேன்.

சகி—அம்மணி அவனன்றி யோரணுவும் அசையாதென்றும் ஆன்றோர் கூறியவண்ணம் அத்தெய்வ சங்கற்பம்போல் நடக்குமேயல்லாது வேறில்லை சிறிது நாளைக்குள் உனது மணாளன் வந்துவிடுவார் கவலையை மாற்றிவை.

தன—நல்லது. தோழிகாள் நாம் வழக்கம்போல்

## கமலாசனியே உந்தன்கழல் என்ற வர்ணமெட்டு

இராகம்-கமாஸ் தாளம்-ஆதி

பல்லவி

ஜலக்ரீடை செய்துநாமே
ஜடுதியில்வரு வோமேசெல்வோமே (ஜ)

அநுபல்லவி

இலக்குமி யைநிகர்த்த
ஏந்திழைகளேயிவ் வேளைநன்னாளே (ஜ)

சரணம்.

சித்திர மலரைக்கொய்தே
சென்னிதனிற்சூடி வுய்தேஇப்போதே
பக்தியோடு தேவிதன்னைப்
பணிந்துவருவோ முன்னேஎன்பின்னே (ஜ)

தன—தடாகஞ்சென்று நீராடி வருவோம் வருவீர்கள்

சகி—தங்களாக்ஞைப்படி சென்றுவருவோம்.

# 5-வது சீன்.

## சோலை பொய்கை

(விஷயம்) தடாகஞ்சென்று நீராடி துகிலுடுத்தி மேடைமீது சயனித்திருக்கும் விக்ரமாதித்த அரசனைக்கண்ணுற்ற தன அமராவதி திப்ரமையுற்று காமமேலிட்டு

### தசரததராஜகுமாரா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்காபி தாளம்-ரூபகம்

பல்லவி

இவராரோ மன்மதனோ நானே அறியேனே
மையலானேன் சகியேனே (இ)

அநுபல்லவி

அவனியிற்பெண்ஜெனன மடைந்தாலிவரையே
அணைந்திடவேணுமன்றேல் அநுகேனென்றுரையை
மவுசுடனிருந்தென்ன மாய்ந்தென்னநிலையே
மங்களமாகவேவை போகம் செய்வேன்ஸ்நேகம்
நல்லயோகம் உற்சாகம் (இ)

எந்தனுக்கேயதிஷ்ட முறுமோ மில்லாதறுமோ
மணமுறுமோ கணப்பெறுமோ (இ)

சுந்தரர்க்கடையாளஞ் செய்துமேலசகை
துரிதமாய்க்காண்பித்தே செல்வேனென்சாய்கை
வந்தணையக்கோறினேன் வந்திடிலிவர்க்கே
மணமதுவாகுவேன் சத்யம் சொன்னேனிச்சயம்
வாழ்வுபைத்யம் துர்க்கிர்த்யம் (இ)

(தனக்குள்) அடடா இப்புருஷனை நாம் நோக்கிப்பார்க்குங்கால் தேவனும் இந்திரனும் மன்மதனுமல்ல இவ்வுலக முழுமையும் பரிபாலிக்கும் சக்ரவர்த்தியைப்போல் தோற்றுகிறது ஆனலிவ் வடிவழகனையன்றோ மணந்துசுகிக்கவேண்டும் அன்றேல் இப் பெண் ஜென்மமிருந்தென்ன இறந்தென்ன உற்றுப்பார்க்குங் கால் இவர்க்கு முப்பத்திரண்டு லக்ஷணங்களன்றோ பொருந்தி

இருக்கின்றது. நாமிப்படிக்கெல்லாம் ஆசைகொள்வது கற்புக்கு இழிவுறமென்றாலும் படைத்த ப்ரமனே என்னைக்கானும்பொருட்டு இச்சுந்தரனை விடுத்த காரணத்தை யோசிக்கில் கூடிச்சுகிப்பதற்காக விடுத்தனன்போலும் தெரிகிறது மேலும் என்னை மணந்துசென்றவர் எவ்வாராகினரோ தெரிகிலேன். பருவந்தப்பினால் மரணமென்றாற்போல் இவ்வாலிபத்தே இன்பசுகமடையாது பின் கிழப்பருவத்தில் சுகம் அடைந்தென்ன அடையாதிருந்தென்ன நாமெப்போதொருவனை நினைந்தேமோ அன்றைக்கே மணமாகிவிட்டது என்னை மணந்தவன் எவ்வளவோ திடகாத்ர சௌந்தர்யமுற்றவனாகயிருந்தபோதிலும் சிஞ்சிற்றும் நினையேன் இதுவே உண்மை இதுவே வைராக்ய கற்புரிமை தற்சமயம் இவ்வேந்தைக்கூடி விளையாட வேணுமென்றாலும் சண்டாளப்பெண்கள் எனக்கிடையூறாகயிருக்கின்றார்கள். மேலும் எனதந்தரங்கம் வெளிப்படுமாகில் அதனால் இழிவும் வசையுமேற்பட்டு மரணத்துக்கும் சம்பவிக்கும் மற்றியாதாமொருவர்க்கேனும் தெரியாதின்பொருட்டு இவ்விருவரும் நமதரண்மனைக்கு வருவதற்கான ஓரடையாளஞ்செய்து செல்வதே தகுந்த யோசனை.

(விஷயம்) ஓர் புஷ்பத்தைக்கொய்து ஸ்தனத்தில் வைத்து காண்பித்து காலிற்போட்டுவிட்டு மணலைக்குவித்து ஓட்டை அதன் மேல் மூடி தன் கூந்தலில் ஒன்றை எடுத்து சுருளாகச்செய்து போட்டு கண்சைகைசெய்து தோழிமார்களோடு தன்னில்லம் சேர்ந்தனள்.

விக்கிர—ஹே மந்திரி சில பெண்களோடு ஓரழகிய ஸ்திரீ ரத்தினமும் இத்தடாகத்தில் ஜலக்ரீடைபுரிந்து நம்மைக்கண்டு புன்னகைசெய்து சென்றதைக் கவனித்தீரா.

பட்டி—ஆம் பார்த்தேன்.

விக்கிர—அன்னவள் செல்லுங்கால் எனதறிவையுமன்றோ கவர்ந்தேகினள் அன்னவளுடைய அபூர்வ சௌந்தர்யமானது

விருத்தம்

குந்தலோ மேகம் வேலோ கூர்விழி பூரணச் சந்த்ர
காந்தியோ முகமோ குன்றோ கவின்முலை முத்தோ பற்கள்

மாந்துளி ரனைய மேனி வையகந் தழகு வாய்ந்த
யேர்திழையென்னைப்பார்த்தேயெங்கனிஞ்சென்றாள்காணேன்

## மடமானாள் மொழிதேனாள் என்ற வர்ணமெட்டு

இராகம்-தோடி தாளம்-ஆதி

பல்லவி

செழுந் தேனாள் மடமானாள்
நீதில்லாதபுவி மாதரசிசெழுந் (தே)

அனுபல்லவி

சிற்பிறாற் கரசி விற்பனியாள் செழுந் (தே)

சரணம்

தேவி யிக்குற்றுயென தாவி கொள்ளைகொண்டாளே மேவி
சென்றாளேநகர் தாவி எவ்வாறுய்குவேன்
க்ஷேம மானகுல சீமான் சேயானாகும்
மாம ணப்புரிவேன் பூமி தன்னிலேதான்
மங்கைக் கிணையுண்டோசொல் லிங்கே நகைத்தவளை யெங்கே
சென்றாளோ காணேன் தங்கேன் க்ஷணமாகிலும்
மாதரோஜெலக் கீடைசெய்தனளே காதலுற்றசாசி
கற்கண்டொத்த முக்கனியாள் கொக்கோ கத்திற்சிறந்தவள்
அக்கடவுளெந்தனுக்கே இக்குவலையிற்படைத்த (தே)

விக்கிர—ஆஹா இவ்வழகிய மாதைப்படைத்த நான்முகக்கடவுளுக்கெனது வந்தனம். இம்மாது நம்மைக்கண்டு புன்னகை செய்து சென்றாளே மனதந்தரங்கம் தெரியவில்லை இதென்ன இங்கே அடையாளம் செய்திருக்கின்றனவே விபரங்கூறுவீர்.

## கோலாகலக்குமரா என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி தாளம்-ஆதி

பல்லவி

மாதவளின்விபரம் வழுத்திடுவேன் (வா)

அனுபல்லவி

சேர்திலாப் புட்பத்தை கொய்துமே ஸ்தனத்தில்
கோதையுற்றாமே பாதமுற்றிட
பூதலத்துயர் காலிங்கமானகர் (வா)

தொகையரு

தமிரிய முற்றிடுக் தன அமராவதி
தந்தைமா ணிக்கருகும்
உயர்மணல் குவித்திடல் ஒட்டிக்வீடாகிடும்
உயர்வணிகர் குலமுற்றிடும்

சரணமுடுகு

சைலகைகள் செய்துமே தன்னில்லமுய்துமே
சார்ந்தனராகையால் வேந்தேசுர்முய்திட
ஏந்திழைபாள்மன மோர்ந்துமேயேகினுள் (ம)

அகவுல்.

மங்கையின்விபரம் வழுத்துவேன்கேண்மின்
இக்கோர்புட்பம் எடுத்துமேதனத்தில்
காட்டிதன்காலிடக் கலிங்கமாநகரம்
தாட்டிகத்தனமுறத் தனஅமராவதி
மயிர்சுருளுறமேதா மயிர்மாணிக்கனு
உயர்மணற்குவித்தல் ஒட்டின்வீடாகும்
சைகைகண்செய்தது ஜடுதியில்வந்தே
மையலைத்தீர்க்க வழுத்தினதிதுவே

விக்கிர—மந்த்ரீ உம்முடைய புத்திசாதுர்யத்தை எவ்வாறு புகழ்ந்துரைக்கப் போகின்றேன் அக்கன்னிகையைச் சேர்ந்தாலிங்கனஞ் செய்வதற்கான மார்க்கத்தைக் கூறுவீராக.

பட்டி—வேந்தே நமது ரூபத்தைமாற்றி கிழப்பிராமண வேடந்தரித்து கலிங்கபுரம் மாணிக்கவணிகனிடம் சென்று தங்கள் கோரிக்கையை ஈடேற்றுவீர்கள்.

விக்கிர—அவ்விதமே செய்வோம்.

(விஷயம்) தனஅமராவதி தான்கண்ட அரசன் வராதுபற்றி துன்புறுதல்.

மதவாரணமுங்கனே என்ற வர்ணமெட்டு

பல்லவி

இனமும் வரவில்லையே நக
ரேகினரோ உயிரே தரியா துரையவர் (இ)

அனுபல்லவி

மணமோர்வித படவேயிலே
மதனவன் கணையுற மார்பு சோருது பார்தனிலேததி (இ)

சரணம்

குளமீதினில் துயிலுற்றிடும்
கோமனைக்கண்டோம் வருந்தினேனே
புளகாங்கிதம் புகுமேதமனம்
பூவையாள் கினைந்திட போகம் சோகம் மோகமகன்றிட (இ)

தன——ஆஹா நான் தடாகத்திற்கண்ட பூமானுக்கெதிரில் வந்தணையும் பொருட்டு அடையாளங்கள் செய்துவந்தும் இதுவரையிலும் வரக்காணேனே அடையாளம் கண்ணுற்றாரோ இல்லையோ அன்னவர் நகரடைந்தனரோ சண்டாள மன்மதனெய்யும கணையானது இம்மட்டல்ல எவ்விதஞ் சகிப்பேன்.

---

## 6-வது சீன்.

### வைசியன் அரண்மனை.

(விஷயம்) அரசன் விக்ரமஜைபர் பட்டி கணிதஜைபராக நாமக்தரித்து வேடம்பூண்டு செட்டியார் அரண்மனைபுக மாணிக்கஞ்செட்டி கண்ணுற்று,

மாணிக்——அந்தணர் குலதிலகராகிய ப்ராமணோத்மர்களே நமஸ்காரம்.

விக்-க——ஆசீர்வாதம் நீடூழி வாழ்க.

(ஆசனமளிக்க அமருதல்.)

சரசக்காரமாமா என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக் தாளம்-ஏகம்.

கண்ணிகள்

மா——எங்கிருந்து வாரீர் வீரச மெவ்வூர்காமஞ் கூறீர்
தங்கள்மனக் தேரீர் ஐயோ சடலம்பழுத்தும் நடக்கலுனீர்

வி——தேவிநக ரூரே நற்றிடவிக்கிரமன் பேரே
தவுங்கணிதரவரே வழி தப்பியிங்குற்றேன்காலை பீரே

மா—ப்ராமணக்கென்ய சிலர்காள் இவ்விருத்தாப்ய வயதில் தளர்வுற்று இந்துறக் காரணம் தெரிவிப்பீர்.

கணி—ஹே தனவைசியகுலத்துங்கா நாங்கள் வசிப்பது தேவிபுரம் என்னுமம் கணிதவையன் அதோ நிற்கின்றவர் விக்ரமஜயன் எங்கள் குடும்பசகிதர்களாய் காசிமுதல் கங்காஸ்நாநம்புரிந்து இராமேஸ்வரம் நோக்கி வருகையில் நாங்கள் இருவர்களும் ஜலபாதையுற சற்றுதாமசித்தன அதற்குள் அன்னோர் வழியைப்பற்றியும் நாங்களோர் வழியைப்பற்றியும் நடந்து வழிதெரியா தவஸ்தையடைந்து போஜனமருந்தி நாள் மூன்றாகின்றது இன்னகரடைந்து தம்ப்ரதாபகேள்வியால் உம்மைக் கண்டோம்.

மா—ஆஹா ஈதென்ன பரிதாபமாயிருக்கிறது ஆரடா வேலைக்காரன் இவர்களை நமதரண்மனைக்கழைத்துச்சென்று பசியகற்றுவதற்குறிய அரிசி முதலியவை கொடுத்தனுப்பும்படி செய்வாய்.

வேலை—உத்தரவு. அம்மா தங்கள் பிதாவானவர்கள் இவர்களுக்கு அமுதுபடி கொடுத்தனுப்பும்படி உத்தரவாயிருக்கிறது.

தன—சரி. (தனக்குள்) நாம் தடாகத்திற்கண்ட பூமான்கள் இவர்கள்தானென்றெண்ணி அரிசி பதார்த்தத்துடன் ஓர் கரும்புக் கிடையில் இரண்டுகாணை தறித்து அப்பெட்டிக்குள்வைத்து கண் சைகைசெய்து (வெளிப்படையாக) ஏ வேதியர்களே இதோ பெற்றுக்கொள்ளுங்கள்.

விக்கிர—நல்லது சென்றுவருகின்றோம்.

(இருவர்களும் சுயவடிவங்கொள்ளுதல்)

விக்கிர—மந்திரி இப்பெட்டியில் இரண்டு கரும்புக்காணையிருக்கின்றனவே யாது காரணம்.

பட்டி—ப்ரபூ அந்தத் தனஅமராவதிக்கு ஸ்நேகிதமாகிய கரும்பினியாள் என்ற தாசியாம் அன்னவள் இல்லத்தில் வசிக்கும்படி இவ்வடையாளமிட்டனள்.

விக்கிர—அவ்வண்ணமே செல்வோம்.

(கரும்பினியாள் வீடு செல்லுதல்)

---

# 7-வது சீன்.

## தாசி கரும்பிலினியாள் வீடு.

விக்கிர—யார் வீட்டிலிருக்கிறது.

கரும்—ஏன்.

விக்கிர—உன் எஜமானி தன அமராவதி உனது இல்லத்திலிருக்கும் படி ஆக்ஞாபித்திருக்கிறாள். நின் சம்மதமென்ன?

கரும்—மிகவும் சந்தோஷம் வாருங்கள் ஆசனமீதுட்காருங்கள்.

விக்கிர—நல்லது.

(போஜன தாம்பூலம் அருந்துதல்)

பட்டி—ஹே கன்னிகா தன அமராவதியினுடைய வரலாற்றைக் கூறுவாய்.

கரும்—ஆகட்டும் கேண்மின்.

விருத்தம்.

தந்தைமா ணிக்க னாகும் தாயவள் வதன காந்தி
புந்தியாய் பெற்ற புத்ரி புருஷனெவ் விடமோ சென்று
இந்திரன் டாண்டு வாகும் அவள்ருது வானாள் மானாள்
சந்ததம் வடிவம் வாய்ந்த தனவதி நாமங் காண்பீர்.

பட்டி—நன்றாய் கவனித்தோம் இந்நகர் அதிசயங்களைக் கண்ணுற்று வருகிறோம் விடையளிப்பாய்.

கரும்—நல்லது கட்டாயம்வந்து சேர்வீர்கள்.

விக்கிர—அவ்விதமே வருகிறோம்.

பட்டி—அரசே தாங்களோர் வணிகப்பெண்போலும் நான் தங்கள் தந்தையைப்போலும் வடிவெடுத்து தங்களை அத்தன அமராவதி முன்னிலையில் சேர்ப்பிக்கிறேன். தங்கள் கருத்தைப் பூர்த்தி செய்வீர்கள்.

விக்கிர—அதுவே நல்ல யுக்தி.

(விஷயம்) அரசன் வணிக விக்ரமப்பெண்போலவும் மந்திரி பட்டணஞ்செட்டிபோலவும் ரூபங்கொண்டு தெருவீதிக்குட் புகுந்தனர்கள். மந்திரி புலம்புதலோடு,

## 8-வது சீன்.

### தெருவீதியும் பின் மாணிக்கன் அரண்மனையும

### செந்திற்குமாரவேளுண்டு என்ற வர்ணமெட்டு.

இராகம்-சுருட்டி தாளம்-ஆதி

பல்லவி

எந்தநாளினிற் காணுவேன் எனதழகிய மருகனை (எ)

அனுபல்லவி மருடம்

இதுவரை தேடியும் அறிகிலே னாடியும் (எ)

இறக்கத்துணி வுற்றனளேபுதல்வி

மறக்கக்கருத் தற்றனள்புவியில் (எ)

ஈசுரன்செயலிது தானோசாதகன்

இன்னசர்வத்துமே தேடுறேன்பாதகன் (எ)

சரணம்

புந்தி சிதைந்துயெந்தன் புதல்விவருந்தவும்

புலம்புதலை நான்கண்டு பொறுமியே கலங்கவும்

பூதலத் தற்றவ ரேசவும் பேசவும்

பாதக னித்தமும் வாதையே யாகவும் (எ)

பட்ட—ஆ தெய்வமே. எனது மருமகனை எந்தநாளிற் காணப்போகின்றேன் இதுவும் எனது காலகெதியா.

(புலம்புதலைக்கேட்ட மாணிக்கஞ்செட்டி)

அடே நீசென்று அதோர் வருந்திச்செல்கின்றவர்களை அழைத்து வருவாய்.

வேலை—உத்தரவு. ஆரய்யா போகிறவர்கள்.

பட்ட—ஏன்.

வேலை—நில்லும் எங்கள் எஜமான் தங்களை வரும்படி கட்டளை செய்திருக்கிறார்கள்..

பட்ட—இதோ வருகின்றேம்.

(செட்டியார் அரண்மனை புகுதல்)

மா—ஐயா இவண் வீற்றிருப்பீர்கள்.

பட்ட—நல்லது.

## பக்திசாதிக்கவிடாது என்ற வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ஆதி

பல்லவி

எந்தவூருந்தன் பேர்கூறும் இந்த
இடஞ்சவுற்ற தேனிங்குவாரும் (எ)

அநுபல்லவி

இந்தமா திவைக்கூட்டி வந்த வரலாறும்
எந்தனுக் கறிவிப்பீர் சந்ததம் வாழ்ந்திருப்பீர் (எ)

மா—ஐயா நீர்வசிக்கும் நகரம்யாது உம்முடைய வர்ணச்சிரமம் குலகோத்திரமும் இக்கன்னியினுடைய வரலாறுகளையும் தெரிவிப்பீர்.

## பட்டணஞ்செட்டி சொல் ஷை வர்ணமெட்டு

பல்லவி

சுந்தரபரம புரமூரே என்பேர்
சொல்வேன்பட்டணஞ் செட்டியாரே (சு)

அநுபல்லவி

இந்தமாது யென்புத்ரி இவள்நாமம் விக்ரமப்பெண்
எந்திழை நாயகனால் இக்கோல மாகிவந்தேன் (சு)

பட்ட—ஐயா நான் வசிப்பது பரமபுரம் என்னைப் பட்டணஞ் செட்டியென் றுரைப்பார்கள் இப்பெண் எனது புதல்வி விக்கிரமப்பெண் எனது சகோதரி புத்ரனுக்கு ஐந்து வயதில் வதுவை செய்துவைத்தேன் அன்னவன் பொருள் சம்பாதிக்க எங்கேயோ சென்றுவிட்டான் வருடம் ஏழாகியும் வாராததால் தேடவுற்றேன்.

## ஷை தரு மாணிக்கன்சொல்

உம்மைப்போ லெந்தனுக்கோர்புத்ரி காத
னுற்றனன் தீவாந்திரமீறி
எம்மாதிரிபோலானீர் ஏழாண்டாச்சுதேபாரீர்
எந்தன் தங்கைபுத்ரனுக் கீய்ந்தேனெவ்வாரானுமே (உ)

மா—ஐயா உம்மைப்போல் எனக்கோர் புத்ரியுண்டு ஐந்து வயதிலேயே எனதுடன் பிறந்த சகோதரி புத்ரனுக்கு விவாஹஞ் செய்தேன் பொருள் சம்பாதிக்கச் சென்றவன் வருடம் ஏழாகியும் வரவில்லை.

ஷை தரு பட்டணஞ்செட்டிசொல்

விம்மிவிம்மியே யழுதேங்கிகேணில்
வீழ்ந்திறப்பே னென்கின்றாளோங்கி
இம்மனையில்விடுத்து யெங்கேனுஞ்சென்றுபார்த்து
என்மருகனுடனேயான் வரும்வரைகாப்பீர் (வி)

பட்டி—அந்தோ எனது புதல்வியானவள் எனது நாயகனோடு சேர்ப்பித்தாலாச்சுது இல்லையேல் என்னுயிரை இழப்பது நிசுதயமென்று பிரதிக்கினையும் பண்ணினள் நான் இன்னமும் எங்கேனும் சென்று பார்த்து எனது மருகனோடு வந்து சேருகிறேன் அதுவரையிலும் தங்களது அடைக்கலமாகவேஇருக்கட்டும் நான்சென்று வருகின்றேன்.

மா—நல்லது நீர் சென்று வரும்வரையிலும் உம்முடைய புத்ரியை எனது புத்ரியிடம் சேர்த்து வாழும்படி செய்கிறேன்.

பட்டி—நிரம்பச்சந்தோஷம்.

விஷயம்நகரத்தைக்கடந்து தன்வடிவமுற்று கரும்பிலினியாள் வீடு சென்று நடந்த வரலாறுகளைக்கூறி இஷ்டானுபோகங்களை அனுபவித்து வாழும் நாட்களில்

மா—எனதருமை புதல்வியே இம்மாதுநாயகன் எங்கேயோசென்று தாயும் இருக்குமிடந் தெரியாததாலும் எங்கேனும் பார்த்து அழைத்து வருவதாய் இப்பெண் தந்தை சென்றிருக்கின்றார் வரும் வரையிலும் ஒற்றுமையாய் வாழ்ந்துவரவேண்டும் நாமம் விக்ரம மாது.

தன—தந்தைசொன் மிக்க மந்திரமில்லை என்றபடி தங்களாக்ஞையின்படி நடந்து வருகின்றேன். (தனக்குள்) நாமெண்ணிய எண்ணம் பூர்த்தியாயிற்று காந்தைப் பிடித்துக்கொண்டு என் பிராண சிநேகித விக்ரமஸ்திரீ வா பஞ்சணைக்குச்செல்வோம் வருவாய்.

விக்கிர—நல்லது வருகின்றேன்.

(ஒருவரோடொருவர் முத்தமிடல்.)

---

# 9-வது சீன்.

## பஞ்சணை அந்தப்புரம்.

வரதனே மகிதலத்தினில் என்ற வர்ணமெட்டு

இராகம்-இந்துஸ்தான்தோடி தாளம்-ஏகம்

தர்க்கம்.

பல்லவி

தன—விற்பனி வேதமாராய்ந்த
விக்ரமப்பெண்ணரசே எனக்கிசை (வி)

அநுபல்லவி

விக்—பொற்பினி பூதலத்துறும்
புனிதவணிக தனவதியான (பொ)

சரணம்

தன—புத்தக வாணியே நித்தமும் பேணியே
ஒற்றுமை யாகவே கர்த்தனைப் பாடியே
போற்றி தங்கள் தமிழுதைச் சாற்றி

விக்—புகழ்வோ மென்று மகிழ்வோம் இந்த
ஜெகமீ தினில் அகலோம் ததி
பொங்கும் புவிதனில் கங்கை குலத்துறும்
தங்கஞ்சொல் செந்தமிழ் சங்கீதம் பாடுவோம் (பொ)

தாராரவம்சலா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்பியாகு தாளம்-ரூபகம்

அரையடிக் கண்ணிகள்

தர்க்கம்.

விக்கிர—கல்யாணமான தா

தன—கல்யாணமிங்கானதே

விக்கிர—கணவன்போ ரோதுவாய்

தன—கன்னி விக்ரமப்பெண்

விக்கிர—கருதியெங் குற்றனன்

தன—கருதியிங் குற்றனன்

விக்கிர—கணவனை யேல்பிரிந் தனியுடன் சயனிக்குங்
காரணங் கழறிடுவாய்

தன—துணையுட னேயிருந் துளமகிழ்ந் திருக்கையில்
சொல்கிறு யோர்விதமாய்

விக்கிர—சூதினை யறிந் தேனே

தன—ஓதுதல் தெரிந்தேனே

விக்கிர—சுகிப்போம்

தன—களிப்போம்

தன—நான் தங்களை தடாகத்திற் கண்டதுமுதல் இதுபரியந்தம் உமது பேரில் காதலாகவே வசித்தேன் எனது கோறிக்கைப் படி தெய்வமானது உம்மை அழைத்துக்கொண்டு என்பால் சேர்த்தது நாமிருவர்களும் பிரியாது ஒற்றுமையாக இஷ்டானுபோகங்களை அனுபவித்து காலங்களிப்பதோடு நாம் நடாத்தும் கலவி விஷயங்களை யாதாமொருவர்க்கேனும் தெரியக்கூடாது இதுதான் முக்யக்கடமை.

விக்கிர—அடி யெனது ஜீவபரிபாலனி நீ கூறுவது வாஸ்துவம் உனது மணாளன் வந்தால் என்னசெய்குவை.

தன—தாங்களே எனக்கு புருடரானபோது வேறு நாயகனுமுண்டோ கிடையாது அச்சண்டாளனை மறந்து வருடம் ஏழாகினது அவ்விதம் வந்தபோதினும் அன்னவனுயிர்க் காபத்துதான்.

விக்கிர—பெண்மணி நீ இவ்விதங் கூறுவது நன்கல்ல, உன்னாயகன் வந்தால் அன்னவன் வாக்கியத்தைத் தவிற்காது ஒற்றுமையாகவே நடந்துவரவேண்டும். விகற்பஞ் செய்யக்கூடாது.

தன—நீரிவ்விதங் கூறி என்னையகற்றுவீராகில் என்னாவியை இழப்பது சத்தியம்.

விக்கிர—(தனக்குள்) ஆஹா இதென்ன பெருஞ்சங்கடமாகவந்து நேர்ந்தது இம்மாது நம்மைக்கண்டு மோகமுற்றபடியால் அவ்

வாசைசயை நிவர்த்திப்பது நீதியென நினைத்திங்குற பிரதமை யிலேயே என்னை நாயகனென்றும் அந்தரத்தில் விடுவீராகில் ஆவியை இழப்பேனென்பதாகவே சததியஞ் செய்தனளோ இதைநாம் தவிள்ப்பது முறையுமல்ல. (வெளிப்படையாக) ஹே அபரஞ்சனீ உனது நாயகன் வந்தால் இதமாக நடந்து வா பின் அறிந்து என்னகரம் உன்னை அழைத்துச்செல்கின் றேன்.

(விஷயம்) விக்கிரமாதித்தன் பகலிற்பெண்போலும் சதுரங்கம் விளையாடல் இரவில் ஆண்வடிவமுற்று இஷ்டகலவி நடத்துதலும் வாழும் நாட்களில்,

---

# 10-வது சீன்.

## கலிங்கபுரம் அரண்மனை.

### அரசன் இராஜகேசரி மந்திரி தர்மாதித்தன் கொலு தர்பார்

சித்தானந்தாகுகா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்பியாக் தாளம்-ஏகம்

பல்லவி

சம்போ சதாசிவாயித் தரணியோர்கள் கொண்டாட
தகும்அரசுநின்றுட தயைபுரிவாய் வாழ்ந்திட (ச)

அநுபல்லவி

நம்பிடுவோர்க் கருள்செயும் நாதசின்மய் வரதனே
வேதன்மால்துதிசெய்பதனே சாதுதொண்டர்ஸ்கிநேகிதனே()

மகுடம்

தற்பரானல சிற்பராவஷூர் (ச)
சாயுஜ்யபத மேயிச்சை கொண்டனன் (ச)
சராயுச. அண்டச சுவேதச் வுற்பிச (ச)
சட்சுதா சாகரமுழு தானிறைந்திடும்
மேன்மைதங்கிடும் பாம்பணிந்திடும் (ச)

தொகையரு

சாத்மீகதெய்வம்நீ தந்தையும்தாயும்நீ
சாதிபேதமில்லாத
ஆத்மாவும்நீயிந்த அண்டபிண்டங்கள்நீ
ஆனந்தரஹிதபோத

சரணம்

அலங்க்ர்தமுறும் கலிங்கநகரம்
அரசுபுரியத் தருகுவைவரம்
கலங்காது சர்வ ஜனங்களுய்யவும்
கடாக்ஷன் தங்கஞ்செந் தமிழ்க்கருளூறும் (ச)

இராஜ—ஹே மந்திரி தர்மாதித்தா நமதரசாளுகைக்குட்பட்ட நகரங்களில்

## ஏழைமீதிலின்னம்வர்மமா என்ற வர்ணமெட்டு

இராகம்-நாட்டை தாளம்-ஆதி

பல்லவி

மாதமூன்று மழைபெய்யுதா வழூத்தவீ ரெனக்குநீர் (மா)

அனுபல்லவி

ஆதிஆலயம் ஆறுவேளையும்
அன்பாய் பூஜைசெய்து வாழ்கின்றாரோ அனுதினம் (மா)

சரணம்

மா மறையோர்களும் மா இறையோர்களும்
மா நிறைதவரா மா வைசியசூத்ரர்
மா தொழில்கள்செய்து க்ஷேமமுய்கிறார
தினமகிழ்வுடன் சீராய்
சிறந்த சத்ரந்தனி லறந்தழைத் தோங்கிறதா (மா)

இராஜ—மந்திரி நமது நாட்டினிடமாகவுற்ற சர்வ ஜனங்களும் குதூகலமாக வாழ்ந்து வருகின்றார்களா.

தன—அரசே யாதொரு விகற்பமுங் கிடையாது.

இராஜ—மிக்கச்சந்தோஷம் நாம் ரதமீதாரோகணித்து நகர்ப்ரவேசம் செய்து வருவதற்கான ஆயுக்தர்களாய் வரும்படி திட்டஞ்செய்வீர்.

தன—அவ்விதமே தயாராகிவிட்டது.

(விஷயம்) நகர்ப்ரவேசஞ் சுற்றிவருதலும் ரதமானது மாணிக்கஞ் செட்டி அரண்மனை கிட்டிவருங்கால் தன அமராவதியும விக்ரமப்பெண்ணும் மேல்மாடியின்மீது உலாவிக்கொண் டிருக்கும் போது இராஜகேசரி வருகிற ஆடம்பரங்களை சற்றேனும ஏறிட்டுப்பாராமலும் நிழல்கண்ணடியைப் பார்க்கிறதும் மையிடுகிறதும் சரசமாக வீற்றிருப்பதைக் கண்ணுற்ற அரசன் ப்ரவசமடைந்து ஆசையுற்று

தாயானபோலுதாரா என்ற வர்ணமெட்டு

இராகம்-தேசிகதோடி தாளம்-ஆதி

பல்லவி

பேஷான் மாதிவளே
பிர்மா வர்மா கர்மா செம்மையாய்க் கற்பித்த (பே)

அனுபல்லவி

தேஷான மேனிகாந்தி தெரிசனஞ் செய்தால்சாந்தி
தீரவுதாரகெம் பிரநன்னரியாள்
பாரில்மாதர்க்கர சாகுமென்பாரியாள் (பே)

தொகையரு

தேவர்முதல்யாருமே கண்டாலோமோகமே
திப்ரமை கொள்வர்சதமே
ஆவலாயழைத்தேகு முன்னமென்னரண்மனைக்
கழைத்தேகல் மிக்கநலமே

சரணம்

அரிதான பராசத்தி அணங்கேநீ வரவாநத்தி
ஆத்திரத்துடன் வார்த்தையாடியும்
பார்த்துரைத்திடா நேர்த்தியறியேன் (பே)

இராஜ—இவ்வழகிய ஸ்திரீயைப் பார்க்குங்கால் எவ்வளவோ என் மனமானது ப்ரமானந்தத்தையும் அவாவும் அதிகரிக்கின்றது என்னசுந்தரம் இவளருகிற்சென்று எவ்விதத்திலேனும் வார்த்தையாடி எனதரண்மனைக்கு அழைத்தேகி எனதெண்ணத்தை நிறைவேற்றுவதே பெரும்பாலும் முக்யகடமை. இனங்

காத பக்ஷத்தில் அன்னவள் பிதாவைக்கேட்டு மணமுடிப்பதே நலம்.

## மடமயிலோ வளர்சோலை என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்தோடி தாளம்-ஆதி

பல்லவி

வருவாயென தாண்மனைக் கெழுந்தருள்வாய் உன்னை
மணந்து கொள்ளுவனேடி (வ)

அநுபல்லவி

இருநிதி முதலுண்மை யாகவே யீய்வேன்
ஏமாதரசியே காமசுரசியே மாமனோகரியே வாமணம்புரிய (வ)

சரணம்

தனவைசியகுல சந்திரவதனி
சந்ததம்பிரிகிலேன் தையலேகௌனி
மனதுரௌம்ய வசனவிற்பனி
மாரனுனவன் சோரஞ்செய்கிறான்
கூறவொனது ஏறவில்லையோ (வ

இராஜ—அடடா நானெவ்வளவோ நின்று வார்த்தையாடியும் நம்மையேறிட்டுப்பாராமலும் சற்றேனும் கவனியாமலும் சென்றுவிட்டார்களே நல்லது. இவர்கள் நாயகர்கள் எத்தேசமோ சென்றும் முகவலங்காரத்துட னிருப்பதை யோசித்தால் வேறு சோரபுருடனை வைத்துச் சுகிப்பாய் தோற்றுகின்றது எனதரண்மனைசென்று யோசிப்பதே நலம்.

---

## 11-வது சீன்.

### இராஜகேசரிகொலுதர்பார்

இராஜ—ஆரடா. சேவகன் மயிர்மாணிக்கஞ்செட்டியை அதிசீக்கிரம் அழைத்துவா.

சேவ—நல்லது (மாணிக்கஞ்செட்டியை அழைத்துவந்து இராஜன் முன் விடுக்க)

175569 -600 008.

## மார்க்கத்தில் கண்டகனி என்ற வர்ணமெட்டு

இராகம்-அடாணா தாளம்-ரூபகம்

தர்க்கம்.

இ—வாரும் வணிகரே மாமணை
உந்தன் சுபுத்ரிக்கு முற்றதுவா அதி

மா—சிருய ரென்றங்கை செய்தரு
புத்ரனுக் கேமணம் டிந்ததுவே

இ—மருகன்கேஷ மாதிசய வழுத்துவீர்
முதல்யா வையும் நன்ருச்சு அன்ஞேன்

மா—திரைகட லோடித் சென்றேழ்
திரவியந் தேடிடச் வருடமாச்சு

இ—இன்னம்வ ராததால் கியக்குவீர்
கன்னி தனையெனக் ஐயமில்லை இது

மா—மன்னர்க் கழகாமோ மணமது
வேரோர் குலத்தில் செய்வதில்லை

இ—சோரனை வைத்து சுகிர்தமோ
சுகிப்பது முங்குல நன்முறையோ இந்தத்

மா—தாரணியி லிவ்விதம் தள்ளிபைப்போ
நடந்தால் மாதைத் முண்மையே

இ—கன்னியின் சோரனை கண்டுபிடித்
நாற்பது நாளைக்குள் தீய்குவான் இது

மா—அன்னீத மன்னீதம் ஞவியைப்
அப்படி யானுலென் போக்கிடுவான்

இரா—ஓய் செட்டியாரே உம்முடைய குமாரத்தியை எனக்குப் பாணிக்ரஹணஞ் செய்தாலென்ன?

மா—வேந்தே எங்கள் வருணாச்சிரமாவது ஒரு கோத்திரத்துற்ற கன்னிகையை மற்றொரு கோத்திரத்தில் கொடுக்கிறதில்லை. அதன்றியும் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தும் இவ்விதம் கூறுவது தங்கட்கழகல்ல,

## அரசன் சினந்து சொல்லுதல்.

கலிலோ என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக் தாளம்-ஆதி

பல்லவி

வணிகாவுந்தன் மகளணைந்திடுஞ்சோர
மனிதனைப் பிடிக்கச்செய்வேன் மொழிபிசகேன் (வ)

அநுபல்லவி

மணமேபுரிந் திடுங்கணவனிலையே
மாதுக்கே னலங்காரம் மொழிபிசகேன் (வ)

சரணம்

பேதமைக்குணம் பெண்களுக்கல்லவோ
பிதற்றினை திடமாக
சாதிமேன்மையென் றோதினை தி
தைரியத் துடனாக
வேதாகமங் கலையுணர்ந்திலாய் தங்கம்
வினவிய தமிழறிந்தே மொழிபிசகேன் (வ)

இரா—ஹே செட்டியாரே உம்முடைய குலத்தில் உற்ற கன்னிகை யானவள் மற்றொரு சோரநாயகனை வைத்து சுகாலிங்கனஞ் செய்வது முறையா.

மா—அவ்விதம் நடந்தால் அப்பெண்ணை எங்கள் வம்சத்தை விட்டகற்றுவோம்.

இரா—உம்முடைய குமாரத்தியினுடைய நாமமென்ன.

மா—தன அமராவதி.

இரா—அத்தன அமராவதி வைத்திருக்கும் சோரபுருடனை இது முதல் நாற்பது நாளைக்குள் பிடித்தும்மிடம் ஒப்பிக்கிறேன். சென்றுவாரும்.

மா—தாங்கள் கூறியபடி செய்துவிட்டால் என்னுயிரை அக்ஷணமே இழப்பேன்.

---

## 12-வது சீன்.

### மாணிக்க வணிகன் மாளிகை.

(விஷயம்) மாணிக்கஞ்செட்டியார் தனதரண்மனை புகுந்து மிக வியாகுலமுற்று,

தனந்ததானத்தனனதானன என்ற திருப்புகழ் மெட்டு

மடந்தை யாலிக் கெதியே மாப்தி
கடிந்து கூறக் குறையோ ததியிதை
யறிந்தி டாதப் பிதமாய் கழறிடார் பவமேதோ

தளர்ந்தி டாதிக் குலமே யேசிடப்
புகன்ற தாலிப் படியே யாகினால்
அகன்று போமெக் குயிரே திடமிது சதிதானோ

(விஷயம்) வருந்துதலைக்கண்ட செட்டி மனைவி வதனகாந்தி ஓடி வந்து,

வத—நாதா ஏன் சஞ்சலமுறுகின்றீர். கூறுங்கள்.

பங்காயிலாயேசாரீரா என்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ் தாளம்-சாபு

பல்லவி.

அன்னீத மென்னசொல்லுவேன் அரசன்சொன்ன (அ)

அநுபல்லவி

என்னை வரவழைத்து இல்லாத தையுரைத்து
கன்னிகையைத்தாவென்றான் கடிமணஞ்செய்வேனென்றான்()

தொகையறா

என்னாதுற்காலமோ யிதுமக்கழகல்ல
வென்றுநான்கூறிநோக
கன்னிபின்சோரனை நாற்பதுநாளைக்குள்
கையுடன்பிடிப்பதாக

சரணம்

சபதபங்கள் செய்திடவும் சஞ்சல மூய்திடவும்
அவதிக் கிடமாகவு யானதிவ் வாராகவும் (அ)

மா—அடி என் தையலே இந்நகரத்தரசன் என்னை வரவழைத்து சொன்ன சங்கதியை நினைக்க நினைக்க என்மனமுருகுதடி இதுவரையிலும் இவ்வித வார்த்தையைக் கேட்டறிகிலேன்.

போம்போமிதுவுங்கனமா என்ற வர்ணமெட்டு

இராகம்-தேசிகதோம்போதி தாளம்-ரூபகம்

பல்லவி

கற்பையறியானரசன் நமதுமகள் (க)

அநுபல்லவி

கற்புங்கடவுளும் மொப்புதல்நீதியே

அற்பமாயெண்ணினன் கற்பனையோதியே (க)

சரணம்

விற்பனனுயிருந்தால் விளம்பிடான் மனம்நொந்தால்

வெந்துபோவான் தீபாலே அந்தோபுத்ரி வாயாலே (க)

இன்னம் வரவில்லையென் றேங்கி மனமிடைந்தே

யிருக்கிறாள் காதலனை நினைந்தே சென்று

ஏழுவருடமாயும் வாழுமிடமாவது

இதுவரை யறிகிலோஞ்சிறந்தே

பண்ணுந்தனவமரா வதிவிற்பனிசொல்மீறாள்

பதைக்கச் சிதைக்க மதிக்கா துரைதான் (க)

வத—ஹே மனுளா பிள்ளையருமை பெற்றவளுக்குத் தெரியும் மற்றவர்களுக்குத் தெரியாது நமது புதல்வி தனஅமராவதியினுடைய கற்பும் குணாதிசயங்களும் எனக்குத் தெரியும் நமது கன்னிகைக்குத் தவறுவருமாகில் நாமள் பிராணனைவைத்து வாழ்வதேது சி கெட்டான் அரசன் இது விஷயத்தைப்பற்றிததாங்கள் கிஞ்சிற்றும் கவலையடையவேண்டாம்.

---

## 13-வது சீன்.

### அரசன் கொலுதர்பார்.

ஓஹோகோ யீங்கிதென்ன என்ற வர்ணமெட்டு

இராகம்-பாரீஸ் தாளம்-ஆதி

கண்ணிகள்

தர்க்கம்

இ—காவலர்காள் பெண்சோரனைக் கைப்பிடித்துக் கொணர்வீர்

கா—கட்டாயம் பிடித்துவாரோம் கட்டளை யருளுவீர்

இ—கட்டாயம் பிடிக்காவிடில் கடுந்தண்டஞ் செய்குவேன்

கா—கட்டளைப் படியேசெய்வீர் கலங்கும்படிக்கேதான்

இ—காண்பேன் பூண்பேன்

கா—காண்பீர் பூண்பீர்

இ—கருதுவீர் நாற்பது நாள்தவணைதந்தேன்

கா—உறுதி தலையறி வீர்சிறந்தே

இ—களிப்படைவேன்

கா—வெளிப்படுவோம்

இ—செல்வீர்

கா—செல்வோம்

காவ—ஏ அண்ணமார்களே அடே தம்பிகளே நம்மன் அரசன் சொன்னபடி செட்டிப்பெண் தனஅமராவதி வைத்திருக்குஞ் சோரநாயகனை இதுமுதல் நாற்பது நாளைக்குள்ளாகப் பிடித்து அரசன் முன்பாக விடுக்கவேண்டும் தவறினல் கொடிய தண்டனைக்குள்ளாகுவோம் வாருங்கள் நாமொன்றுகக்கூடி செட்டியாருடைய அரண்மனையைச் சுற்றிலும் சூழ்ந்திருப்போம். சோரன் அகப்படுவான் கைப்பிடியாகப் பிடித்து அரசன்முன் சேர்ப்பிப்போம்.

மற்றவன்—சரிசரி.

(விஷயம்) இவ்விதம் முப்பத்தொன்பது நாள்வரையிலும் பார்த்தும் சோரனகப்படாததால் விசாரமுறல்.

காவ—ஐயோ நாமென்னடா செய்கிறது இன்றிரவு தப்பினல் நாளைத்தினம் நமதரசன் ஆக்கினை செய்வாரே என்செய்வோம் அப்பாடே.

(விஷயம்) தனஅமராவதியும் விக்கிரமப்பெண்ணும் மஞ்சத்தில் சயனித்திருக்குங்கால் அன்றிரவு தென்றற்காற்றில்லாது புழுக்கத்தினல்

விக்கிரமப் பண் சொல்.

என்பேரைச்சொல்லி மருந்துரை என்ற வர்ணமெட்டு

இராகம்-இந்துஸ்தான்பியாக் தாளம்-ஏகம்

கண்ணிகள்

தென்றற்காற்றுனது பின்றில்லாதால்வேர்வை
த்ரேகம் நீரோடுதடி அத
ஞல்களைப் பாருதடி காம
கன்றுகொல்லைப்புறம் நன்ருய்சயனித்து
கலவிசெய்வோம் ஜோடி இங்
கிலாவடைமுன் ஞடி
கற்கச்சிறக்கநற் கொக்கோகமிக்கதே
காமநூலைப் படிப்போமே அந்தக்
காமனைப்போ ராடுவோமே (தெ)

விக்கிர—கண்மணி நமக்குத் தென்றற்காற்று விழாததால் திரேகத்தில் வியர்வையே தருகின்றது ஆனதால் கொல்லைப் புறக்கதவைதிறந்து வாழைத்தோட்டத்தின் கிணற்றருகில் ஓர் கச்சுக்கட்டில் போட்டு சயனித்தின்புறுவோம்.

தன—அவ்விதமே செல்வோம்.

---

## 14-வது சீன்.

### வாழைத்தோட்டம் கிணறு பஞ்சணை சயனம்

(விஷயம்) சரசமாடுவதும் வெண்மைப்பட்டுப் புடவைமேலணிந்து துயிலுகையில்

காவ—(கண்ணுற்று) அடே அதோ பாருங்களடா அரண்மனை வெளிப்புறத்தில் வெள்ளையாகிய நிறந்தோற்றுகின்றது சத்தம் போடாமல் வாருங்கள் சென்றுபார்ப்போம்.

மற்றவன்—அப்படியே செல்வோம்.

(விஷயம்) உற்றுப்பார்க்குதலும் குறட்டைவிட்டு நித்திரை செய்கிறதைக்கண்டு மனக்குதூகலமடைந்து மெதுவாகிய சப்தத்துடன்

காவ—அடே திருடியும் திருடனும் அகப்பட்டுக் கொண்டார்கள் விடிவதற்குக் கொஞ்சம் நேரமிருப்பதால் நாமிக்கட்டிலோடு தூக்கிப் பத்திரகாளி கோயிலில்வைத்து சூரியோதயத்திற்குள் நமதாசனிடம் ஒப்பிவிப்போம்.

மற்றவன்—ஆமாமா நல்ல யோசனைதான்.

(விஷயம்) மெதுவாகத் தூக்குதலும் பைரவி கோயிலிற்குட்வைத்துப்பூட்டி சுற்றிலும் காவலானார்கள். பட்டியாகிய மந்திரியும் தாசி கரும்பிலினியாளும் இரவில் சல்லாபத்துடன் சயனித்திருக்குங்கால் ஓர் கௌவுளியானது பளபளவென்று சப்திக்க மந்திரியானவன் கேட்டு

---

# 15-வது சீன்.

## தாசி கரும்பிலினியாள் வீடு சயனம்.

பட்டி—ஆ என் காதலி நமதாசனுக்கும், தனஅமராவதிக்கும் ஆபத்து நேரிட்டதாய்த் தெரிகிறது என்செய்வேன்

கரு—என்ன ஆபத்து நேர்ந்தது தெரிவிப்பீர்கள்

பட்டி—கூறுகின்றேன் கவனமாய்க்கேள்.

### பட்டிசொல் நொண்டிச்சிந்து.

காதற் கரும்பிலினியே—துயர்
கழறுவேன்கவனமாய் கேட்பாய்தனியே
மாதுமன் னனுமிரவில்—தென்றல்
வாடைக்காகவெளியில் துயிலுகையில்
அன்றராஜன் சொற்படிபோல்—காவல
ரனுகிசயனத்தோடு தூக்கியேகியே
மன்றுளாடுங் காளிகோயிலில்—வைத்து
மகிழ்ந்துசூழ்ந் திருக்கின்றுருதயமதில்
வேந்தர்முன் விடுப்பாரே—பார்க்கும்
வெளியாகு மானல்கண்டுநகைப்பாரே
ஆய்ந்தநூல் கற்பகமே—நா
னுண்டியுபநீபாண்டிச்சியாய் வேடம்பூண்டுமே

அரசன்பெண் ணையுமேகற்றி—நா
மவரைப்போல்சயனிப்போம் வாராய்நோக்கி
கருணமே யாகும்விரைவில்—பைரவி
ஸ்தானிசனிடஞ்சாமான் பெற்றுவருவாய் (தந்தின)

கரு—ப்ரபூ தங்கள் சித்தம்போல் நடக்கத்தயாராகயிருக்கின்றேன்

(விஷயம்) பட்டி கூறிய பிரகாரம் ஸ்தானிகனிடம் காவிவேஷ்டி அங்கவஸ்திரம காவிச்சேலை காதோலை கருகுமணி பழம் தேங்காய் புட்பம் சூடன் சாம்பிராணி காளாஞ்சி கைமணித் தீப தூபக்கால்களாகிய சாமான்களைவாங்கிக்கொண்டுமந்திரியிடங் கொடுக்க பெற்று பட்டி ஆண்டிபோலும் தாசி ஆண்டிச்சிபோலும் வடிவந்தரித்தல்.

---

## 16-வது சீன்.

### பைரவி ஆலயம்

(விஷயம்) இருவர்களும் பைரவி ஆலயம்புகக்கண்ட தலையாரிகள் ஆக்ரமித்து

காவ—ஏ அறிவில்லாத பண்டாரங்களே இந்நேரத்தில் இவ்விடம் வரவேண்டிய காரணம் என்ன.

ஆண்—அப்பா தலையாரிகளே அரசன் தேவி அந்தப்புரத்திற்கு எங்களையழைத்து இவ்விரவிலேயே நார்களறியாமல் பூஜை செய்துவரும்படி ஆக்ஞாபித்திருக்கின்றார்கள் ஆனதால் இங்கு வந்தோம்.

காவ—சே இங்கே பூஜையாவது முழக்கமாவது செய்யக்கூடாது வந்தவழியைப்பற்றி ஓடிப்போவீர்கள்.

ஆண்—நல்லது நாங்கள் அந்தப்புரஞ்சென்று தலையாரிகள் பூஜை செய்யக்கூடாதென்று கோபத்துடன் வற்புறுத்தித் தாத்தி விட்டார்களென்று சொல்லிவிடுகிறோம் (சற்றுதூரம்நடக்க)

காவ—இதென்னடா பெரியெழவும் பேரிழவுமாகயிருக்கிறது சோரனைப் பிடிக்காவிட்டால் தகுந்த ஆக்கினைசெய்வதாய் ராஜனுடைய வருதி அந்தத்தவணையும் இன்றோடே சரியாகினது அவ்விதமிருக்க இராஜதானி இரகசியமாய் செய்யச்சொன்ன

பூஜையை நாம் நடுத்ததால் இராஜிவும் வெளியாகி அரசனுக் குத் தெரிந்தால் முன்சங்கடத்தைப் பார்க்கிலும் அதிக சங் கடம்நேரிடும நமகம்கன்கேடு. ஏ லெச்சைகெட்ட எச்சிப் பண்டாரங்களே நீங்கள் பூஜையைமுடித்து வெளியே வர வேண்டியது மற்றபடிக்கி அங்கே இருக்கிற விதங்களைப்பார்க் கக்கூடாது தெரியவருமா

(காக்கைக்கடித்தல்)

ஆண்—நாங்கள் வந்த காரியத்தை முடித்துச் செல்வோமேயன்றி மற்ற காரியங்களை எதற்காகப் பார்க்கப் போகின்றோம்.

(விஷயம்) உட்பிரவேசித்து விக்கிரமாதித்தனைமெல்ல எழுப்ப எழுந்து,

விக்கிர—பட்டி இதென்ன ஆச்சரியம்.

ஆண்—வேந்தே நடந்தவை பின்னால் கூறுகின்றேன் நீங்கணிந்திரு க்கும் ஆபரணாதிகளைத்தந்து எங்களது காவிவஸ்திரத்தை நீங்கள் தரித்துக்கொண்டு பூஜையை முடித்துச் செல்லுங்கள்

விக்கிர—நல்லது.

(விஷயம்) விக்கிரமஆண்டி தேங்காயுடைத்து தூபதீப நைவேத்தி யந்தந்து ஜெயகண்டிகை முதலிய சங்கையூதி மணியடித்து பூஜையை முடித்து பிரசாத முதலானதெல்லாம் எடுத்துக் கொண்டுவந்து கலியாரிகளுக்கு விபூதியும் ஒரு தேங்காய் முடியும் கொஞ்ச பிரசாதமும் கொடுத்தல்.

விக்கிர—நாங்கள் வந்து பூஜைசெய்ததை பிறருக்குத் தெரிவியா தீர்கள்.

காவ—நாங்கள் எதற்காகச் சொல்லப்போகிறோம். அப்படிச் செய் கிறதாயிருந்தால் எங்களைப்போல் மடையர்கள் கிடையாது வாங்கித்தின்னுபோட்டு வல்லங்கம் பேசுவோமா சீக்கிரம்செல் லுங்கள்.

விக்கிர—நல்லது.

(விஷயம்) விக்ரமப்பெண்ணும் தனஅமராவதியும் தன்னிருக்கை சேர்ந்து நடந்தவைகளைப் பேசிக்கொண்டு உல்லாசமாக வீற் றிருக்க பட்டியும் கரும்பிலினியாளும் அன்னவர்கள் எவ்வாறு

சயனித்திருந்தார்களோ அதன்படி சயனங்கொள்ள சூரியோ தயமாகுதல் தலையாரிகள் தூக்கி அரசன்கொலுவில்வைத்தல்.

---

## 17-வது சீன்.

### அரசன் தர்பார்.

காவ—மகராஜ் ப்ராக் எச்சரிக்கை.

இரா—பேஷ் தலையாரிகாள் அமருவீர்கள்.

காவ—உத்தரவு

இரா—அடசேவக் மாணிக்கஞ்செட்டியை அழைத்துவா ஜல்தி.

சேவ—இதோ அழைத்துவந்தோம்

இரா—வாரும் செட்டியாரே (செட்டி திப்ரமைகொள்ளுதல்) உமது குமாரத்தியையும் சோரநாயகனையும்

### நம்பினேனுனையே என்ற வர்ணமெட்டு,

இராகம்-கல்யாணி தாளம்-ரூபகம்.

பல்லவி

கண்டீரோ கேர்த்தியை அல்ல்
காணீர் போது மானீர் மேலுங் (க)

அநுபல்லவி

விண்டீரோநான் சொன்னசொல்லை
மெய்மறந்தீ ரோயித்தொல்லை
பண்டுநூல்வா சித்தீரில்லை
பாபஞ் சோபங் கோப தாபமோ (க)

சரணம்

மருகன்றானெப் போதுவந்தார்
வந்தவரிங் கேன்புகுந்தார்
அருகிற்றெரி சனமேதந்தார்
ஊருந் தேரும் பாருங் கூறும் (க)

இரா—அடசேவக் ஏதோ செட்டியார் மெய்மறதியோடு நிற்கின்றார். எல்லோர்க்குந் தெரியும்படி புடவையை எடுத்துவிடுவீர்கள்.

(விஷயம்) எடுத்துற கரும்பிலினியாளும் மந்திரியும் திகிலடைந்து எழுந்திருப்பவர்போல் எழுந்து தாசி வெட்கித்து நிற்க மந்திரி தலைகவிழ்ந்துற்று கட்டிவிட்டத்தேவசிக்க செட்டியார் மனச்சந்தோஷமடைந்து அரசனைப்பார்த்து,

## தக்கபாரங்கல்லைத் தூக்கி என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக் தாளம்-ரூபகம்

கண்ணிகள்

சபதந்தன்னை முடித்தீரோ எனைச்
சஞ்சலப் படவிட்டீரோ
அபகீர்த்திக் காளாய்ச்செய்தீரோ நல்ல
ஆண்சிங்க மென்றேங்கினீரோ (ச)

அரசர்களுக் கிதுமுறையா இந்த
அன்னீதஞ் செய்வதுநிறையா
தருணத்திற் கேற்றதுமறையா எங்கள்
ஜாதியி லூக்குறக்குறையா (ச)

மா—ஏ அரசே என்னை அலட்சியப்படுத்தி எங்கள் குலத்தை இழிவுபடுத்த நினைப்பது முறையா இதுவொரு சிறையா.

தாசி கரும்பிலினியாள் சொல்

## ஸ்ரீராமபாதமா என்ற வர்ணமெட்டு

இராகம்-அம்சவாகினி தாளம்-ஆதி

பல்லவி

ஐயோயிம்மோசமே யார்செயுபாயமே
யார்க்கும் பரிகாசமே (ஐ)

அநுபல்லவி

தையலோ தாசி சரசமாய்ப் பேசி
தக்கபொருளைவாங்கிச்சு சிக்குமெங்கள் ஜாதியே (ஐ)

சரணம்

தாம்பூலந் தருவீர் க்ஷணத்திலிவ்வூரை
தான்விடுத் தேகுவேன் சந்ததம் வாழ்வீரே
போம்போது ஆடையோடு போகிறேன் றயரோடு
பொல்லாதயிக்காலந்தானோ எல்லாஞ்சிவனசெயல்தானோ (ஐ)

கரு—ஹே பூபதி உலகத்தில் யாதாமொருவர் துர்க்கிர்த்தியஞ் செய்வாராகில் அதனை நிவர்த்திப்பது அரசர்கள் கடமை அவ்விதமிருக்க தாங்களே இக்கெட்ட காரியங்களைச் செய்தால் என்போன்ற எளியவர்கள் பிழைப்பதெவ்விதம் ஆனால் தாசிகள் வீடிருக்கக்கூடாதென்றால் இந்த க்ஷணமே எங்கேனும் செல்கின்றேன் தாசி குலவழக்கமாவது யாதெனில், எவரேனும் பொருள் தருவாராகில் அவர்களுக்கிணங்கி நடப்பதே தொழில்முறை தங்களுக்குத் தெரிந்திருந்தும் இந்த அன்னீதஞ் செய்யலாமா?

இரா—(கவலையடைந்து) ஏ கணிகை அணங்கே வணிகன் புதல்வியினுடைய சோரனைப்பிடித்து வரும்படி தலையாரிகளுக்கறிவிக்க அகப்படாமையால் தண்டனைக்குட்பயந்து பதிலாய் உங்களைக் கொண்டுவந்து சேர்த்தார்கள் இதுஎன்னால் நடந்தவைகளில்லை இதைப்பற்றி கவலையடையவேண்டாம். மந்திரி இவர்களுக்கு வேணவரிசைகள் கொடுத்தனுப்பும். செட்டியாரே கிஞ்சிற்றுங் கவலையடைய வேண்டாம் சென்றுவாரும் மந்திரி இத்தலையாரிகளுக்குத் தகுந்த தண்டனை விதிப்பீர்.

தர்—அவ்விதமே செய்தேன்.

(விஷயம்) தனஅமராவதியினுடைய நாயகன் மரகதஞ்செட்டிவந்து சேருதல்.

---

## 18-வது சீன்.

### தனஅமராவதி சபாமண்டபம்.

சுயராஜ்யமதிக தூரமில்லை என்ற வர்ணமெட்டு

இராகம்-இந்துஸ்தான்பியாக் திாளம்-ஆதி

பல்லவி

மஹாகனந் தங்கிய மாதுலரே வந்தனம்
மகிழ்வுட னாதரிப்பீர் மாண்புடனே (ம)

அனுபல்லவி

நகரமதைவிட் டேகி நானேழ் வருடமாச்சு
நற்கடித மனுப்ப வயர்ந்தேனே (ம)

தொகையரு

எப்பிழையிருக்கினும் தப்பிதம்பொறுத்திடீர்
எனதுயர் தேவிசுகமா
இப்போதியாவரின் க்ஷேமங்களென்னவோ
சந்தோஷ மன்னோநலமா

மர—மாமா முதலிய யாவர்களுக்கும் எனது வந்தன வழிபாடுகளை ஏற்றுக்கொள்ளக்கடவீர்கள்.

(விஷயம்) ஒருவருக்கொருவர் நிகழ்ந்தவைகளைக்கூறி சந்தோஷமுற மரகதஞ்செட்டி தனது மனைவி தன அமராவதி அந்தப்புரம் வருதல். தன அமராவதி கவலைகொள்ளல். விக்ரமப்பெண் தேற்றி. வேறொரு அறையில் புகுதல்.

மர—எனதாசை நாயகி உன்னை ஐந்து வயதில் மணந்து பிரதேசஞ் சென்று வருடம் ஏழாகியும் உன்னை மறந்துவிட்டேனென்று மனதில் கவலை கொள்ளாதே.

தன—வாஷ்துவந்தான்.

(இருவரும் பஞ்சணைமீது வீற்றிருத்தல்)

விக்கிர—ஹே மித்ரி எனது அத்தானவர்கள் வந்தாராமே.

(விஷயம்) கதவைத்தட்டுதல் சப்தத்தைக்கேட்ட மரகதவணிகன் கதவைத்திறப்பது

மர—பெண்ணே இம்மாது யார்?

தன—இக்கன்னிகை நாயகன் உம்மைப்போல் பிரதேசஞ் சென்றதாலும் வருதலினால் இவள்பிதா நம்மிடம் ஒப்பித்து அழைத்துவரச் சென்றிருக்கின்றார் பெயர் விக்ரமப்பெண். நீர் இப்பெண்ணிடம் யாதொரு சங்கதியும் பகரக்கூடாது. மீறிநடப்பீராகில் மரணத்துக்கேதுவாகிவிடுவீர்.

(விஷயம்) விக்கிரமப்பெண் மோகனமந்திரத்தை உச்சரித்தல் அதனால் வணிகன் காமதுரந்தரனாகி விக்கிரமஸ்திரீ அறைக்குள் புகுந்து

## பாரீஸ் வர்ணமெட்டு.

### தீர்க்கம்.

மர—கண்ணே நீ சேருவாய்
வி—கட்டாய மாளுவாய்
மர—மாண்டாலுஞ் சம்மதம்
வி—ஏண்டா பயித்தியம்
மர—காதலு மாகுதே
வி—கசடா வருந்தீதே
மர—நீதுவராதடி சேர்ந்திடு வாயடி
வி—பாதகாநில்லடா பாரேன் சமர்த்தடா

(விஷயம்) காமெவ்வளவோ கூறியும் கேட்கிருனில்லை. அன்னவனுக்கிணங்குவதைப்போல் இணங்கி அவமானப்படுத்தி விடுவதே முறை.

விக்கிர—நாதா இதுவரை நான் தங்களை பரிசோதித்தேனே யன்றி வேறில்லை நான் தங்களிடம் அகப்பட்டதின்மீது இனிதப்பிக்கப்போகிறதில்லை சற்றுபொருங்கள் வருகின்றேன்

(விஷயம்) வேதாளத்தை வரவழைத்து மந்திரவாளைப் பெற்றுக் கொண்டு மரகதஞ்செட்டியிடம்வந்து சரசஞ்செய்வதுபோல் செட்டியினுடைய ,நாசியை அறுத்துவீழ்த்த ரத்தம் பீரிட்டோடக்கண்ட வணிகன் யாவராலும் இகழ்ச்சியாகுமெனநினைத்து பாழுங்கேணியில் வீழ்ந்திறந்தனன்.

விக்கிர—காதலி உனது நாயகன் என்பால்வந்து நாசியறுபட்டு இன்னேரம் எங்கேனும்சென்று இறந்திருப்பான்.

தன—அப்படியானல் மிக்கச்சந்தோஷம்

விக்கிர—ஹே ஜீவபரிபாலினி இனி நானிங்கிருக்க தேவையில்லை இன்றுமுதல் ஐந்து தினத்திற்குள் உனது தாய்தகப்பன் முதலியவர்கள் சம்மதத்தின்பேரில் உன்னையழைத்துச் செல்கின்றேன். தற்சமயம் உனது கணவனும் நானும் இங்கில்லாததால் என்னையவன் திருட்டுத்தனமாகக் கூட்டிச்சென்றதாக கூக்குரலிடுவாய் பின்னல் நடக்குங் காரணங்களை அறிந்து கொள். நான் சென்றுவருகின்றேன்.

தன—நாதா தங்கள் யுக்தியே யுக்தி சித்தம்போல் நடக்கின்றேன்.

(விஷயம்) விக்கிரமாதித்தன் பெண்வடிவை நீக்கி சுயரூபங்கொண்டு தாசி வீட்டையடைந்து பட்டியும் அரசனும் நடந்தவைகளை கூறி சந்தோஷமுற்றிருத்தல்

தன—சகிகாள் எனது காந்தனை யெங்கேயடி காணேம்.

சகி—அம்மா எங்களுக்குத் தெரியவருது பார்த்திலோம்.

அமரநபி என்ற வர்ணமெட்டு

இராகம்-பியாக் தாளம்-ஆதி

பல்லவி

காதலனை யிங்கே காணேமடி யென்செய்வேன்
காதலனை மிகுங் கண்ணியனை யெந்தன் (கா)

அநுபல்லவி

மாதரசியைக் கூட்டி மணரச்சென்றாரோ நாட்டில்
மங்காதுயருற இங்கேசிறையுற
எங்காலமோயினி தங்கேனுயிர்கெடும் (கா)

சரணம்

வரதைக்கிட மாகவும் வைத்தாயீசா சதமும்
மந்த்ரசுதந்தர சுந்த்ரவரோஹரா
சந்த்ரசடாதரா எங்கினும்நிறைபரா (கா)

தன—ஐயோ எனது மணாளனுக்கு எவ்வளவோ கூறியும் கேளாது என்பாலிடமிருந்த விக்கிரமப்பெண்ணை தெரியாது அழைத்து எங்கேயோ சென்றனர். இதை என்பிதாவிடம் தெரிவித்து வருவீர்கள் சகீகாள்.

சகி—ஆகட்டும் (மாணிக்க வணிகனிடஞ்சென்று) பிரபூ தங்கள் மருகன் வந்தவர் விக்ரமப்பெண்ணை எங்கேயோ அழைத்துச் சென்றனர். அத்தகவலை தெரிவிக்க வந்தோம்.

மா—அடடா இதென்ன பெருமோசமாகயிருக்கிறது நம்மிடம் ஒப்பித்த செட்டி வருவானே அவனுக்கெவ்வித உத்தாரஞ் சொல்லுவேன். அட சேவகாரர்களே சண்டாள மருமகனவந்ததும்

விக்கிரமப்பெண்ணை எங்கேயோ கூட்டிச் சென்றாலும் எப்படியாவது அப்பாவிகளைப் பிடித்துவருவீர்கள்.

வேவு—நல்லது

(விஷயம்) வேவுகாரர்கள் பார்த்தழைக்கச்சென்றதும் காணமையால் வந்துசொல்லுகிறதும் யாவர்களும் துக்கித்துக்கொண்டிருக்குங்கால்

பட்டி—இறைவரேரே தாங்களெனக்கு மருமகனாகவும் நான் மாமனாகவும் வேடந்தரித்து மாணிக்கனிடஞ் செல்லுவோம்.

விக்கிர—சரி

(விஷயம்) எங்கேயோ சென்று வந்தவர்களைப்போல் செட்டியார் இல்லம்புகுந்து,

பட்ட—ஐயா வைசியகுலத் தலைவரேரே நானெங்கேயோ தேடியும் திரும்பிவரும் மார்க்கத்தில் இரவியென்னுந் தீவிலேயே எனது மருமகனாகிய இராஜமாணிக்கஞ் செட்டியைக் கண்ணுற்று அழைத்து வந்தேன் எங்கள் தேசம்விட்டுப் புறப்பட்டு ஆறு மாதங்களாகின அவசியம் செல்லவேண்டும் எனது புதல்வியை அனுப்புவீர்கள்.

(விஷயம்) மயிர்மாணிக்கஞ்செட்டி பதிலுரைப்பதற்கு நாவெழாமல் துக்கத்துடன் மௌனமுற்றிருத்தல்.

பட்ட—ஏது கூறுதிருக்கின்றீர் நாமப்பெண்ணை வைத்துச் சுகித்தனுபவிக்கலாமென்றிருக்க இச்சண்டாளன் வந்துற்றானே யென்று விசாரமுற்றிருக்கின்றீரா அன்றியும் நாமௌனஞ் சாதித்தே அனுப்பிவிடலாமென் றெண்ணுகின்றீரா உமது மனதிலிருக்கும் அந்தரங்களைக்கூறும்.

மாணிக்கன்செட்டி சொல்

எப்படியிருந்தால் நமக்கென்ன என்ற வர்ணமெட்டு

இராகம்-தர்பார் தாளம்-ஆதி.

பல்லவி

இவ்விதஞ்சோ திப்பதழகாமா ஜெக
நேசனேசர் வேசனேதன் — நேசனே பிரகாசனே (இ)

அநுபல்லவி

வெவ்விய மருகன்வந்தே விடுத்து பெண்ணைக்கொணர்ந்தே
வெந்துழலும்படியாக விரைந்தேகச்செய்தான்நோக (இ)

சரணம்

இந்தவிபரந்தனை யறிந்தாலோ இந்நகர் வேந்தன்
இயற்றொண்ணு தண்டனை செய்வானே நான்
எந்தவித மாய்ச்சகிப்பே னிங்கெனக் குற்றதுயர்போல்
இதுவரை யானறிகிலேனே
சந்ததம்பணிந்ததற்கா தயங்கும்படி விடுத்தாய்
சுந்தரமேதங்கத்தமிழ் சுகுணாலஞ்சலவந்தாய் (இ)

மா—இதுவும் சிவபெருமானது கட்டளையேயல்லாது வேறில்லை. ஐயா பட்டணம் மாணிக்கஞ் செட்டியாரே கோபமில்லாது கேட்டருள்வீர் பிள்ளையார் பிடித்துவைக்க பெருங்குரங்கானதைப் போல் ஆயிற்று. சண்டாள மருமகன் வந்ததும உமது குமாரத்தியைத் திருட்டுத்தனமாக எங்கேயோ அழைத்தேகினன் எங்கும் தேடியும் காணாததால் வியாகூலமுற்றிருக்கின்றேனே தவிர வேறில்லை.

## தொலினேசேஸின என்ற வர்ணமெட்டு.

இராகம்-சுத்தபங்காளா தாளம்-ஆதி

பல்லவி

இனிநானுனை விடு வேனோதிருடா
இழிபடுவாய்மதி யில்லாதமூடா (இ)

அநுபல்லவி

எனது புதல்வியை எங்கொளித்தனையோ
வினவுவாயஎமையென் றெணாமினைந்தாயோ (இ)

சரணம்

அடைக்கலப் பொருளினை யபகரித்திடவோ
அறைந்தனையடடாவுன் னுவிபோக்கிடவோ
வடுக்குலமாகினே மாந்தர்கள்நகைக்கவோ
மதிமருண்டனையோடா மார்க்கங்கெட்டசடா (இ)

பட்—ஏங்காணும் செட்டியாரே பரியாசத்துக்காக ஆளிழப்பபென்று பார்த்தீரோ என் புதல்வியை ஒப்பித்தாலாச்சுது

இல்லையேல் உன்னையும் உனது குலத்தாரையும் அடியோடே வீழ்த்தும்படிசெய்ய இங்கசாத்தாசனிடம் தெரிவிக்கின்றேன் பார்.

### இராஜமாணிக்கஞ்செட்டி சொல்

## மதுரகானமிர்துவசனி என்ற வர்ணமெட்டு

இராகம்-சுருட்டி தாளம்-ஆதி

பல்லவி

மதியில்லாத நிர்மூடா என்
மாதைதவைப்பதமுகோ டாநவில் (ம)

அநுபல்லவி

இதனைப்போலே கண்டதில்லை பெண்ணை
ஈடுவைத்தனை கேடுவுற்றனை
இடஞ்சலின கடைந்திடும்படி (ம)

சரணம்

என்னிடந்தனில்விடுக் காவிடி லுயிரை
எமனோசமனுப்புவேன் பாரடாபதரே
இன்னிலத்தோர்க்கெல்லாம் வசையே செய்தாய்
இந்தவேளையி லுந்தனைமிக
இடருறவணி கனிடமதில் (ம)

இ-மா—அடே என்மனையாளை இந்தவண்டனிடம் ஒப்பித்துவிட்டு என்னை ஏமாற்றஞ் செய்வதற்காகவா அழைத்து வந்தாய் (பட்டியின்மடியைப்பிடித்து) அடே உன்னையும் இப்பாதகனுகிய மணிக்கஞ்செட்டியையும் அவனைச் சேர்ந்தவர்களையும் கால் வேறு கைவேறாகப் பிளந்தெரிகிறேன் பார்.

### மாணிக்கஞ்செட்டிசொல்

## மாமயிலவனே குமரா என்ற வர்ணமெட்டு.

இராகம்-சுருட்டி தாளம்-ஆதி

கண்ணிகள்

பதறுதகாரியமே மனது சிதறு தொருபோதுமே நிசுயமே
சதிகாரன் வந்துமே மதியாதுகத்துமே
தங்கள்மங்கைதனயக்கூட்டி எங்கேசென்றுனோநாட்டில் (ப)
தனவமராவதியை நீர்மணந்து தான்வாழ்வீர் நீடூழியே உறுதியே
மனமது பொறுப்பீரே வந்தென்னை ரக்ஷிப்பீரே
மன்னவர் கண்டாராகில் வாழுயிர்க் கிடாகும் (ப)

மா—ஐயா தாங்கள் எனது வார்த்தையைக் கேட்டங்கீகரிக்கப் பிரார்த்திக்கிறேன். இங்குநடந்த செய்தியை இங்காத்தாச

னுக்குத் தெரிந்தால் தகுந்த ஆக்கினை கிடைக்கும் ஆகையால் தன அமராவதியினுடைய கணவன் தங்கள் மனைவியைத் திருடிக்கொண்டு போனமையால் அன்னவன்தேவி தன அமராவதியை நீர் மணந்து வாழக்கடவீர்.

(விஷயம்) இராஜமாணிக்கஞ்செட்டி சம்மதித்தும் சம்மதியாதவனாயிருக்க பட்டணஞ்செட்டி மருமகன் காலில் வீழ்ந்து,

பட்டணஞ்செட்டி சொல் விருத்தம்

இறந்தவ ரோடு நாம விறக்கவா போமோ பப்பா
மறந்திடு அப்பெண் தன்னை மாணிக்க வணிக னின்று
சிறந்திடுஞ் சேயாள் தன்னை செய்திடு மணமே நன்றே
அறந்தழைத் தோங்கும் நம்மூ ரவசியஞ் செல்ல வேணும்.

பட்ட—அப்பா மருமகனே இனி வருந்துவதில் பிரயோஜனமில்லை தன அமராவதியே எனக்கு ஸ்ரேஷ்ட புத்திரியாகும் விகற்பஞ்செய்யாமல் மணந்துகொள் நமது நகரஞ்செல்லவேண்டும்.

(விஷயம் சம்மதித்ததின் மீது நல்லசுபமுகூர்த்தத்தில் இராஜமாணிக்கஞ்செட்டிக்கும் தன அமராவதிக்கும் விவாஹ மஹோத்சவம் நடைபெற்றது. தன அமராவதியுடன் தாசி கருப்பிலினியாளையும் அழைத்துக்கொண்டு வேதாளத்தின்மீது ஆரோஹணித்து உச்சினிமாகாளிபுரஞ் சேர்ந்து அரசுபுரிந்தனர்.

பார்லாபிஷேகப்பழநி என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்பியாக் தாளம்-ஏகம்

பல்லவி

ஜீவாதாரகற் பரம்பொருளாமாதி தெய்வங்கடவுளுக்கு மங்களம்()

அநுபல்லவி

மூவுரு கொண்டுமே முத்தொழில் செய்துமே
முத்தர்கள் சித்தர்கள் பக்தர்கள் யாவர்க்கும் (ஸ்ரீ)

தொகையரு

தேவர்முதல்மானுடர் மிருகம்புள்ளூர்வன சிறந்திடும் நீர்வாழ்வன
தாவரம்சாலோக சாமீபசாரூப சாயுஜ்யந் தனைநம்பின

முடுகு

தாணிதனிலேயுநும் கருணையுள்ளோர்க்கும்
தங்கஞ்செந்தமிழினுக் கன்புடையோர்க்கும்
சாந்தன்விக்ரமா ஜேக்கிரன்பட்டிக்கும்
வந்திறைதாலை ராஷிக்கும் (ஸ்ரீ)

தன அமராவதி சரித்திரம்
முற்றுப் பெற்றது.

---

125569

208
15-11